முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1061

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.08.2022, வியாழக்கிழமை

1. கருணைவடிவான அரங்கனே
கலியிடரை வெல்லும் தேசிகனே
பெருமைமிக்க அன்னதானங்கள் செய்து
பேருலகமெங்கும் அறம் வளர்க்கின்ற குருராஜனே
2. அசரனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி தன்னை
வழங்குவேன் சுபகிருது வேங்கை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 09 நாள், 25.08.2022 வியாழக்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் சக்தி கூடி
தவலோகம் தர்மலோகமாக இந்த கலியுகம்
மண்ணுலகம் ஞானயுகம் மாற்றம் பெறும்
மக்களெல்லாம் ஞானிகளாக மாற்றம் பெறக்கூடும்
4. கூடவே இந்தவித அற்புதத்தை
குறிக்கோளாய் கொண்டு உலகினிலே
ஈடேற்றமாக அவதாரம் புரிந்த அரங்கன்
இனையில்லா சேவைகளெல்லாம் ஆறுமுகன் என்னருளால்
5. அருளாலே காக்கப்பட்டு உலகமெங்கும்
ஆற்றல் மிக்க சேவையாக பரவிவர
வரமென உலகோர் அரங்கனைத் தொடர்ந்து
வணங்கிடவே இந்த அற்புதங்கள் வெற்றி காணும்
6. காணவே அரங்கன் திருவடி பற்றி
கலியுகத்தில் ஞானம் பயிலுபவரெல்லாம்
ஞானபண்டிதன் என்னருளால் ஞானிகளாக
ஞாலமதில் கடைத்தேற்றம் பெறக்கூடும்
7. தேற்றம் தரும் ஒரே மார்க்கம்
தேசிகன் தரும் சன்மார்க்கமாகும்
ஆற்றல்தரும் ஒரே மார்க்கம்
அரங்கன் தரும் அன்னதான மார்க்கமாகும்
8. மார்க்கமதை வழிமொழிந்து உலகோர்
மனமுவந்து சரணாகதி கொண்டு
பாருலகில் தொடர்சேவையாற்றி
பணிந்து வர இந்த உலகே ஞான லோகமாகி

9. ஆகியே அரங்கனால் அற்புதம் நிகழும்
ஆறுமுகன் என்னருளாசியால்
அனைத்தும் வெற்றி ஆகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–